# பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் உடல்

# The Concept of Body in Pambatti Siddhar Padal

***பா. பாண்டியராசா***
பதிவெண்: Q10146
முனைவர் பட்ட ஆய்வாளர்
சைவ சித்தாந்த தத்துவத்துறை
தத்துவம் சமயங்கள் மற்றும் மனிதநேய சிந்தனைப் புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

**P. Pandiyarasa**
*Registration Number: Q10146*
*Ph.D. Research Scholar*
*Department Saiva Siddhanta Philosophy*
*School of Religions, Philosophy and Humanist Thought*
*Madurai Kamaraj University, Madurai*

## ஆய்வுச் சுருக்கம்

*இக்கட்டுரையில் பாம்பாட்டி சித்தரின் தத்துவம், குறிப்பாக காமம் பற்றிய அவரது கருத்து பற்றிய விரிவான குறிப்புகள் தரப்பட்டுள்ளன. சித்தரின் தத்துவத்தின் பொதுவான அம்சம் மனித உடலுக்கு முக்கியம் என்பதை பாம்பாட்டி சித்தரின் பாடல்களின் மூலம் ஆசிரியர் காட்டுகிறார். காமத்தில் இருந்து வெளிவர பாம்பாட்டி சித்தரின் குண்டலினி யோகத்தை இக்கட்டுரை விளக்குகிறது.*

***முக்கியச்சொற்கள்:*** *பாம்பாட்டி சித்தரின் பாதம், சித்தர், தத்துவம், குண்டலினி, யோகம்.*

## Abstract

*This article gives detail notes to Pambatti siddhar's philosophy specifically his notion on lust.The common feature of Siddha's philosophy give important to human body is shown by the author with Pambatti Siddhar's songs. The article explains the Pambatti siddhar's kundalini yoga to come out from lust.*

***Keywords:*** *Pambatti Siddhar's Padal, Siddha, Philosophy, Kundalini, Yoga.*

**Citation**

Pandiyarasa, P. "The Concept of Body in Pambatti Siddhar Padal." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 1, 2023, pp. 1–5.

**முன்னுரை**

*பாம்பாட்டிச் சித்தர் உடல் பற்றி இருபது பாடல்களைப் பாடியுள்ளார். இவர் இயற்றிய பாடல்களில் யோகம், ஞானம், தத்துவம், அறநெறி ஆகியவற்றைப் பற்றியும் பாம்பாட்டிச் சித்தர் பாடியுள்ளார். விருத்தாச்சலத்தில் இவர் சமாதியானதாகச் செவிவழிச் செய்தி உள்ளது.*

*அதுமட்டுமின்றி யோகத்தின் மூலம் உடலை செம்மையாக வைப்பது மற்றும் உடலையும், மனத்தையும் குண்டலினி மூலம் கட்டுக்குள் கொண்டுவர முடியும் என்பதை பற்றியும் தெளிவாக கூறுகிறார். ஊடலில் உள்ள பாம்பு எந்த அளவிற்கு தெளிவோடு ஒவ்வொறு மனிதனும் பிரபஞ்சத்தோடு சேர்ந்து வாழமுடியும் என்பது பற்றி தெளிவாக விளக்குகிறார். இதன்மூலம் மனித உள்ளம் ஒரு நிலையடைகிறது.*

***நெளிந்து நெளிந்துநெளிந் தாடுபாம்பே - சிவன்***
***சீர்பாதங் கண்டுநெளிந் தாடு பாம்பே***
***ஆடுபாம்பே நெளிந்தாடு பாம்பே - சிவன்***
***அடியிணைக் கண்டோமென்றாடு பாம்பே***

*ஒருமுறை யோகத்தில் வெற்றி கண்டயாரும் அதிலேயே ஈடுபாடாக இல்லாவிட்டால் பெற்ற வெற்றி நிலை மாறிவிடும்.[1] என்பதே சித்தர்களின் சிந்தனையாக வெளிப்படுத்தப்படுகிறது. தெளிந்த சிந்தனையை முதலில் உள்ளத்தில் கொண்டுவர வேண்டும் என்கிறார். சிவன் சீவனாக உடலில் தழுவி நிற்பார் என்பது ஆய்வின் மூலம் புலப்படுகிறது. எனவே பாம்பாட்டி சித்தர் என்ற பெயர் வர சில காரணம் அவற்றின் சிறப்பு கீழே*

*இப்பெயர் வருவதற்கு முன் காடுகளுக்கு சென்று பாம்புகளைப் பிடித்துக்கொண்டு இருப்பார். இவ்வாறு பாம்புகளை பிடித்துக் கொண்டு இருக்கும் வேலையில் ஒளி வீசும் உடம்புடன் சித்த புலவர் ஒருவர் எதிரில் வந்து நின்று. உனது உடலில் பாம்பு உள்ளது அது உன்னை ஆட்டிவிக்கிறது. அதைத் தேடி கண்டறிந்தால் நீ உயர்வாய் என்று கூறி மறைந்தார். பின்பு இவர் சிந்திக்கத் தொடங்கினார். ஏனெனில் தியானத்தின் மூலம் அந்தப் பாம்பை உணர முடியும் என்று அவரா◌ிந்தார். இங்கு பாம்பு என்பது உடலிலுள்ள குண்டலனி சக்தி ஆகும். இந்த குண்டலினியை கண்டறிந்து செயல்பட்டோம் என்றால் உடலிலுள்ள சக்தியை உள்ளத்தால் உணர முடியும் என்பது புலப்படுகிறது.*

**குண்டலினி**

***“நாதர்முடி மேலிருக்கும் நாகப் பாம்பே***
***நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே***
***பாதளத்தில் குடிபுகும் வைகொள் பாம்பே***
***பாடிப்பாடி நின்றவிளை யாடு பாம்பே”[2]***

*“பரமசிவனின் முடிமீதிருக்கும் நாகப் பாம்பே, யோகியர் தலை வரை வரும் குண்டலினியாகிய பாம்பே, நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே நீ விரும்பும்படி சுழுமுனை நாடியாகிய பையில் இருந்து நல்லது செய்யும் பாம்பே. புற்றில் நுழைந்து பாதாளத்தில் குடி ஏறும் பை கொண்ட பாம்பே உடலின் பாதளமாகிய மூலாதாரத்திலிருக்கும்*

*நாடியின் வழியில் வாய் வைத்திருக்கும் பாம்பே நாகத்தால் பாடப்பாட விளையாடி மேல் ஏறும் பாம்பே, (குண்டலியே)"[3] இந்தப் பாம்பை ஒவ்வொரு மனிதரும் உணர வேண்டும். என்பதற்கு ஏற்ப ஒவ்வொரு மனித உடலில் புரவ மத்தியில் சக்தி இடம் பெற்றுள்ளது. அதுமட்டுமின்றி அந்த சக்தியே கபாலம் வரை உச்சந்தலையில் சகஸ்ராரத்தில் சக்கரம் உள்ளது என்பதை உடலோடு உள்ளத்தையும் ஒப்பிடும் போது உணர முடிகிறது. ஏனெனில் உடலில் உள்ள ஆற்றல்கள் அனைத்துக் குண்டலினியிலும் உள்ளது. குண்டலினியிக்கும் சுழிமுனை நாடிக்கும் தொடர்பு உள்ளது.*

**காமம் விலக்கல்**

*இந்த உடலானது காமத்தில் சிக்கித் தவிக்கிறது என்கிறார்.*

***"வெயில்கண்ட மஞ்சள்போன்ற மாத ரழகை***
***விரும்பியே மேல்விழுந்து மேவு மாந்தர்***
***ஒயில்கண்டே இலவுகாத் தோடுங் கிளிபோல்***
***உடல்போனால் ஒடுவாரென் றாடாய் பாம்பே"[4]***

*"வெளிச்சத்தில் தெரியும் மஞ்சள் போன்ற மாதர் அழகை விரும்பி, மேலும் மேலும் ஆசை கொள்ளும் மாந்தர், இலவம் பஞ்சைப் பழமென்று காத்திருந்து ஏமாந்த கிளி போல் உடல் தளர்ந்ததும் ஆசையைக் கைவிட்டு ஓடுவர் என்று ஆடாய் பாம்பே"[5]*

*இவ்வாறு உடல் மீது ஆசை கொண்டு திரியாமல் இருக்க வேண்டும் என்கிறார். ஏனெனில் இந்த உடல் நிலையற்றது என்கிறார். எனவே உடலின் தன்மையை அறிந்து உள்ளத்தால் செயல்படுத்த வேண்டும். பின்பு உடலில் உள்ள ஆசையை ஒழிக்க முடியும் என்பது உற்று அறிய முடிகிறது.*

**உடலின் இரகசியம்**

***"மலக்குடம் மீதினிலே மஞ்சள் பூச்சென்றும்***
***மல்கும்புழுக் கூட்டின்மேல் வண்ணத் தோலென்றும்***
***சீலக்குழிக் குள்ளேநாற்றஞ் சார்ந்த சேறென்றும்***
***தானறிந்து தள்ளினோமென் றடாய் பாம்பே"[6]***

*"மலத்தைச் சுமக்கும் குடமான உடம்பில் மஞ்சள் பூச்சு என்றும்? புழு நெளியும் கூடாகிய உடம்பின்மேல் போர்த்தியுள்ள அழகான தோல் என்றும், வண்ணத்தோல் என்றும் சலக்குழியில் சேர்ந்த நாற்றமுள்ள சேறு என்றும் அறிந்துதான் பெண்களின் மீது கொள்ளும் ஆசையைத் தள்ளினோம் என்று ஆடாய் பாம்பே"[7]*

*இவ்வாறு உடலைப் பற்றி உடலுக்குள் இருக்கும் குடத்தைப் பற்றியும் மிகவும் தெளிவாக விளக்குகிறார். ஏனெனில் உடலுக்குள் உள்ள குடம் இல்லை என்றால் இந்த உடல் இயங்க முடியாது என்பதற்கு ஏற்ப. ஏனெனில் இந்த உடலில் பாம்பு உள்ளது அதுபோல குண்டலினியைக் கட்டுக்குள் வைத்தால் வாழ்வில் வளம் பெறலாம் என்பதனை இதன் மூலம் அறிய முடிகிறது.*

***"ஊத்தைக் குழிதனிலே மண்ணை யெடுத்தே***
***உதிரப்பு னலினிலே யுண்டை சேர்த்தே***
***வாய்த்தகுய வனாரவர் பண்ணும் பாண்டம்***
***வறகோட்டுக்கு மாகாதென் றாடாய் பாம்பே"[8]***

*மக்கிய மண்குழியில் மண் எடுத்து உதிரமாகிய நீரால் உண்டை சேர்த்து விவரமாகக் குயவனார் பண்ணும் பாத்திரம் (இந்த உடல்) உடைந்த ஓட்டுக்குரிய மதிப்பைக் கூடப் பெறாது என்று ஆடுபாம்பே,*

*"மண் பாத்திரம் உடைந்தால் ஒடு என்று அதைப் பயன்கொள்வர். உடம்பு அழிந்தால் அதை யாரும் பயன்படுத்தமாட்டார்கள். கடவுளே இங்குக் குயவன் மாயையாகிய குழியில் மண் எடுத்து உதிரம் சேர்த்துப் பிடித்தது இந்த உடல் என்க"[9]*

***"இருவர்மன் சேர்த்திட ஒருவர் பண்ண***
***ஈரைந்து மாதமாய் வைத்த சூளை***
***அருமையா யிருப்பினு மந்தச் சூளை***
***அரைக்காசுக் காகதென் றாடாய் பாம்பே"[10]***
***"இந்த உடல் மும்மூர்த்திகளில் இருவர்***
***துணையுடன் பிரமன் ஆகிய ஒருவன் செய்து***
***பத்து மாதம் சூளையில் வைத்து***
***அறியதாயினும் - மந்தமானது (பாதிவெந்தது)***
***இது - அரைக்காசுக்குக் கூட விலைபோகாது என்று ஆடுபாம்பே"[11]***

*இந்த உடலை உற்று நோக்கும் போது மண் எவ்வாறு கரையுமோ அது போல் கரையும் என்பது இதன் மூலம் அறிய முடிகிறது. எனவே உடல் என்பது காற்றடைத்த பை என்பதும் அந்த பைக்கு உரையுள்ளது அது போல தோல் உடம்பில் போர்த்தப்பட்டுள்ளது என்பதை கண்டு அறிவதன் மூலம் ஓர் நேர்மை உள்ளத்தில் ஏற்படுகிறது.*

**ஊடல் இழிவு**

***"சியுமல முஞ்செறிசெந் நீரும் நிணமுஞ்***
***சேர்ந்திடுதுர் நாற்றமுடைக் குடமது உடைந்தால்***
***நாயுநரி யும்பெரிய பேயுங் கழுகும்***
***நமதென்றே தின்றிடுமென் றாடாய் பாம்பே"[12]***
***"சீழ், மலம், செந்நீர், கொழுப்பு சேர்ந்து***
***துர்நாற்றம் ஆகியவை உடைய இந்த***
***உடலாகிய குடம் உடைந்தால் நாயும் நரியும்***
***பெரிய பேயும், கழுகும் நம் உணவு***
***என்று போட்டியிடும் என்று ஆடு பாம்பே"[13]***

*நாறும் மீன்களை எவ்வளவுதான் தண்ணீரில் ஒரு தடவைக்கு பதினெண் தடவை கழுவினாலும் அதன் நாற்றம் போகாது. அது போல் நீ எந்த அளவிற்குப் புண்ணிய தீர்த்தத்தினாள் ஆடினாலும் உடம்பில் மலம் போகாது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதனை உணர முடிகிறது. உனக்குள் இருக்கும் சக்தியைக் கவனமாகக் கையாள வேண்டும். என்கிறார். நீ உனது உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கு உனது சக்தி (குண்டலினியை) நீ கையாளும் முறை மிகவும் அவசியம்.*

**முடிவுரை**

இந்த உடல் பற்றிப் பாம்பாட்டிச் சித்தர் பல்வேறு விதமாக விளக்குகிறார். என்பதை போல மரப்பொம்மை மண்ணால் செய்த இந்த உடம்பு, அதனை நீ பயன்படுத்தும் விதத்தில் தான் இருக்கிறது அதுமட்டுமின்றி உடலில் இருக்கும் கவர்ச்சி நிரந்தரம் இல்லை. அதனால் அதுவும் பொய். ஆண் பெண் என்ற உடல் பாகுபாடு உள்ளது. ஆனால் ஆண்கள் பெண்கள் கவர்ச்சியைக் கண்டு கவர்ந்து சென்றுவிடாமல். பெண்கள் அழகினை அதனை கண்டு அசந்து விடாதீர்கள். எனவே அசையும் இந்த உடலில் எதுவும் நிரந்தரம் இல்லை என்பது புலப்படுகிறது. எனவே இந்த உடலை பத்து மாதம் சூளையில் வைத்துப் பாதுகாத்து பின்பு வாழ்நாளில் கழித்துவிட்டு இந்த உடல் அரைக்காசுக்குக் கூட விலைபோகாது ஆடு பாம்பே என்றார். எல்லாம் உனது செயலில் உள்ளது. கவனம். எல்லாம் பயணம். அதுமட்டுமின்றி உடலில் மூலாதார சக்கரத்தில் பை உள்ளது. அந்த பைக்குள் தான் அனைத்து சக்தியும் அடங்கியுள்ளது இவையே உடலுக்குள் உள்ள உள்ளத்திற்கு ஆற்றலை கொடுக்கும் செயலை செய்ய வைக்கிறது. இந்த உடல் வாழ்வில் பல்வேறு பயன்களை பெற்று அனுபவித்து அழிகிறது என்பதையும் இக்கட்டுரையின் வழியே உணர்ந்து கொள்ள முடிந்தது.

**அடிக்குறிப்புகள்**

1. அ. அறிவொளி, சித்தர் பாடல்கள் மூலமும் உரையும், தொகுதி - I ப. 359
2. வா. சரவணமுத்து, பெரியஞானக்கோவை 3-பாகங்கள், ப. 202
3. அ. அறிவொளி, சித்தர்பாடல்கள் மூலமும் உரையும், தொகுதி- I ப. 365
4. வா. சரவணமுத்து, பெரியஞானக்கோவை 3-பாகங்கள், ப. 206
5. அ. அறிவொளி, சித்தர்பாடல்கள் மூலமும் உரையும், தொகுதி- I ப. 375
6. வா. சரவணமுத்து, பெரியஞானக்கோவை 3-பாகங்கள், ப. 206
7. அ. அறிவொளி, சித்தர்பாடல்கள் மூலமும் உரையும், தொகுதி- I ப. 377
8. வா. சரவணமுத்து, பெரியஞானக்கோவை 3-பாகங்கள், ப. 207
9. அ. அறிவொளி, சித்தர்பாடல்கள் மூலமும் உரையும், தொகுதி- I ப. 377
10. வா. சரவணமுத்து, பெரியஞானக்கோவை 3-பாகங்கள், ப. 208
11. அ. அறிவொளி, சித்தர்பாடல்கள் மூலமும் உரையும், தொகுதி- I ப. 377
12. வா. சரவணமுத்து, பெரியஞானக்கோவை 3-பாகங்கள், ப. 208
13. அ. அறிவொளி, சித்தர்பாடல்கள் மூலமும் உரையும், தொகுதி- I ப. 376

**துணைநூற்பட்டியல்**


1. அ. அறிவொளி, சித்தர் பாடல்கள் மூலமும் உரையும் தொகுதி -ஐ, புதியபதிப்பு - 2019 வர்த்தமான பதிப்பகம், சென்னை - 17
2. வா. சரவணமுத்து, பெரியஞானக் கோவை 3 - பாகங்கள் நா. இரத்தின நாயகர் அன் சன்ஸ், பதிப்பு - 2016 சென்னை - 7


## References


1. Arivoli, A., Siddhar Padalgal Moolamum Uraiyum, Volume-1, New Edition – 2019, Varthamana Pathipagam, Chennai – 17.
2. Saravanamuthu, V., Periyagnana Kovai, 3 – Volumes, N. Ratna Nayakar And Sons, Edition – 2016, Chennai – 7.